முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 11.08.2025

O.S. 252/2016

வா.சா.1 -எலிசபெத்மேரி.

1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

1) நான் குடியிருக்கும் வீடு நான் கிரயம் வாங்கிய இடத்தில் இருந்து எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 3 கி.மீ. இருக்கும். இடம் விற்பனை தொடர்பாக குண்டலை சேர்ந்த தரகர் செல்வராஜ் தகவல் தெரிவித்தார். தரகரிடம் நான் விற்பனை ஆவங்களாக என்னென்ன வாங்கி பார்த்தேன் என்றால் 60 வருட வில்லங்கம், தாய்பத்திரம் நான்கு எல்கைகள், முத்து சாமி 163/2004 என்ற வழக்கில் தங்கநாடாச்சி க்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ததில் முத்துசாமிக்கு ஆதராவாக தீர்பாகி உள்ள ஆவணங்களை நான் பார்த்தேன். தங்கநாடாச்சி அவரது பிள்ளைகளுக்கு எழுதிக்கொடுத்த செற்றில் மென்ட் ஆவணம் செல்லாது என்று நீதிமன்றத்தில் தீர்பாகி விட்டது. அதை விற்பனைக்கு முன்பாகவே பார்த்தேன். நான் எடுத்த வில்லங்க சான்றிதழில் தங்க நாடாச்சி எழுதிக்கொடுத்த விபரம் வில்லங்கத்தில் பதிவாகி இருந்தது.

2) தங்கநாடாச்சி எழுதிக்கொடுத்த செற்றில் மென்று ஆவணம் குறித்து தரகர் செல்வராஜ் யிடம் கேட்டேன் அவர் நீதிமன்ற தீர்பாணையை கொடுத்தார். நான் விலைக்கு விற்பனை வாங்கும் முன்பு இடத்தை நேரில் சென்று பார்த்தேன் அதில் தங்கநாடாச்சி யின் பிள்ளளைகள் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை. அதை ஒழிப்பித்து நீதிமன்ற உத்தரவை நான் பார்த்தேன். தங்கநாடாச்சியின் பிள்ளைகளை நான் சென்று விசாரித்தேனா என்றால் இல்லை.

3) நான் 7 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். முத்துசாமி தாக்கல் செய்த வழக்கில் பிறப்பித்த தீர்பாணையில் தங்கநாடாச்சியின் செட்டை (கொட்டகை) ஒழிப்பித்து கொடுக்கவேண்டும் என்று கொடுக்கப்பட்டிருந்தது என்றால் வருடங்களானதால் ஞாபகம் இல்லை. தீர்பாணைவிபரம் தெளிவாக தெரியயும் என்றால் தெரியாது. முதன்மை வாக்குமூலத்தில் பக்கம் 5 ல் நடுபகுதியில் ஒழிப்பித்த விபரத்தை தெளிவாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு அந்த விபரம் நேரடியாக தெரியாது. நான் அந்த விபரங்களை குறிப்பிடவில்லை. 2004 ல் ஒழிப்பித்த பிறகு 2006 ல் நான் கிரயம் பெற்றேன்.

4) எனக்கு எழுதிக்கொடுத்த முத்துசாமிக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் பாகப்பிரிவினை மூலம் பாத்தியம். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை நான் படித்து பார்த்தேன். மேற்படி பாகப்பிரிவினைப்பத்திரமானது 1982 ல் 240 பத்திரம் என்றால் வருடம் சரி ஆவண எண்

எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் 544/3 என்றால் சரி. இந்த வழக்கு சர்வே எண் 547/3 என்றால் சரி. 544 என்பது தேதிய நெடுஞ்சாலையின் சர்வே எண்ணாகும். சர்வே எண்ணை சர்வேயர் தவறுதலாக எழுதிவிட்டார். எவ்வாறு தேசிய நெடுஞ்சாலையின் சர்வே எண் என்பதை தெரிந்து கொண்டேன் என்றால் நாங்கள் எங்கள் பத்திரத்ை எழுதுவதற்கு முன்பே சர்வே எண்ணை தேசிய நெடுஞ்சாலை என்பதை தெரிந்து கொண்டு நான்கு எல்கையை கொண்டு பத்திர எழுத்தர் மூலம் தெரிந்து கொண்டேன் பத்திர எழுத்தர் எங்களது சர்வே எண்ணை திருத்தம் செய்து ஆவணம் செய்து கொடுத்தார்.

5) தாய்ப்பத்திரத்தில் உள்ள எண்ணை மாற்றி எனது பத்திரத்தில் வேறு எண்ணை எவ்வாறு போடமுடியும் என்று கேட்டீர் என்றால் நான் கேட்டேன். நான் மனு கொடுத்தேன். தவறான சர்வே எண்ணை திருத்த சொத்தின் உரிமையாளரான பால்பாண்டியும் நானும் மனு கொடுத்தோம். அந்த மனுவின் நகல் வீட்டில் உள்ளதா என்றால் உள்ளது. நிறைய தாள்கள் உள்ளதால் அதில் உள்ளதா இல்லையா என்று சாட்சி தற்போது மாற்றி சொல்கிறார். முத்துசாமி தாக்கல் செய்த வழக்கில் தங்கநாடாச்சி மட்டுமே தரப்பினர் என்றாலும் மற்றவர் தரப்பினர் இல்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

6) முத்து சாமி உரிமையில்லாத தங்கநாடாச்சி மீது வழக்கு தாக்கல் செய்ததால் அந்த வழக்கின் தீர்பாணை சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரிதான். 163/2004 வழக்கு தாக்கல் செய்தபோது வில்லங்க சான்றிதழில் காண்பிக்கப்பட்ட பிரதிவாதிகளை கட்சி சேர்காமல் அந்த வழக்கில் தீர்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 163/2004 வழக்கில் சர்வே எண் 547/3 ல் உரிமையாளரான பிரதிவாதிகளை கட்சி சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்ப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7) முத்துசாமி தாக்கல் செய்த வழக்கின் தீர்பாணைக்கு எதிராக பிரதிவாதிகள் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 471/2012 ல் முத்துசாமிக்கு எதிராக முத்துசாமி தாக்கல் செய்த வழக்கின் தீர்பாணை செல்லாது என்று விளம்புகை பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் நான் அந்த வழக்கில் கட்சி இல்லை அதனால் தெரியாது. ஆனால் அவ்வாறு தெரியாத விபரங்களை எனது முதல் விசாரணையில் எவ்வாறு சொன்னேன் என்றால் 2016 ல் பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்த போது அதனை நான் தெரிந்துகொண்டேன். நான் முத்துசாமியுடன் கூட்டு சேர்ந்து போலியாவணம் தயார் செய்தேன் என்றால் சரியல்ல.

8) பிரதிவாதியின் தாயார் 62 சென்ட்டை முழுமையாக பிரதிவாதிகளுக்கு செற்றில் மென்ட் ஆவணம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள இந்த தனி வழக்கு சட்டப்படி நிலைநிற்காது என்றால் சரியல்ல . காவல் துறையில் சென்று புகார் அளித்த போது எங்கள் ஆவணங்களை பார்த்து எங்களுக்கு

சாதகமாக இருப்பதாக சொன்னதால் நாங்கள் வழக்கறிஞரிடம் சென்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம். பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.